**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 49-2026**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : மணிவண்ணன் | Defence | : |
| Father's Name | : அகோரம் | Court | : |
| Village | : கரைமேடு | Taluk | : தரங்கம்பாடி |
| Calling | : | | |
| Age | : 24/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 05.08.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஹோட்டலில் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 1 வருடத்திற்கு முன்பு இரவு 9.30 மணியளவில் ஆக்கூர் முக்கூட்டில் உள்ள விஷாலி உணவகத்தில் நான் வேலைபார்த்துக் கொண்டிருந்தபோது அங்கு திடீரென்று அதிக நபர்கள் உணவகத்திற்கு வந்திருந்ததால் அங்குள்ளவர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் அங்கிருந்த எனக்கு கையில் காயம் ஏற்பட்டது. யார் தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. கூட்டத்தில் ஆஜர் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரிகள் தாக்கியதாக போலீசாரிடம் புகார் கொடுத்தேன். ஆனால் எதிரி என்னை தாக்கவில்லை. புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்காததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் எதிரிகளுடன் சமாதானமாகி சமாதன மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 02.09.2025 அன்று இரவு 9 மணிக்கு மருதம்பள்ளம் கீழத்தெருவை சேர்ந்த அருள்தாஸ் ஆஜர் எதிரி, நான்வேலை செய்த விஷாலி

ஹோட்டலுக்கு வந்து சிக்கன் கிரேவி 2 கேட்டார். நான் அதற்கு முன்பு பெறப்பட்ட சமையல் ஆர்டரை முடித்துவிட்டு அவருக்கு கிரேவி தயார் செய்துக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி என்னிடம் வந்து நான் எவ்வளவு பெரிய ரௌடி எவ்வளவு நேரமாக காத்திட்டு இருப்பது குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என திட்டி என் மீது சாஸ் பாட்டில் மற்றும் இரும்பு ஜக் போன்றவற்றால் அடித்தார் என்றால் சரியல்ல. அதை தடுத்தபோது என் உள்ளங்கையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அங்குள்ளவர்கள் தடுத்தபோது ஆஜர் எதிரி என்னை பார்த்து குச்சிக்காரி மவனே வெளியே வாடா உன்னை கொன்றுவிடுகிறேன் என்று மிரட்டினார் என்றால் சரியல்ல. மேற்கண்ட சங்கதிகளை புகார்மனுவிலும் போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியால் எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**